IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.13 /2024

dated : 12.08.2025

D.W.1

Name நாகூர்கனி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை(தொடர்ச்சி)</u>

என் மீது கம்பம் தெற்கு காவல் நிலையத்தில் கு.எண்.483/2021, 630/2021, 773/2021 வழக்குகள் போலி பீடி தயார் செய்தது சம்பந்தமாக போடப்பட்ட வழக்கு என்றால் சரிதான். மேற்கண்ட குற்ற வழக்கு சம்பந்தமாக கடந்த 29.12.2021 மற்றும் 24.08.2021 தேதியில் தினதந்தியில் எங்களின் புகைப்படம் இடம்பெற்றுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ-20 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள பெயர் என்னுடைய பெயர்தான். வா.சா.ஆ-21 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெயரும் என்னுடைய பெயர் என்றால் சரிதான். வாதியிடம் RS Gold பீடி தயாரிப்பதற்கான உரிமமும், ஜி.எஸ்.டி. பதிவும் இல்லை. தயாரிப்பதற்கான உரிமமும், ஜி.எஸ்.டி. பதிவும் இல்லை என்று கூறுவது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.9 ஆவணத்திற்கும் வாதிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ-10 மற்றும் 11 ஆவணத்திற்கும் வாதிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. வாதியின் வியாபாரத்தின் மதிப்பை குறைக்கவும்

அதனடிப்படையில் வாதியின் வணிக நற்பெயரை முறைகேடாக பயன்படுத்தி லாபம் அடையும் கெட்ட எண்ணத்துடன் போலியான பீடி உற்பத்தி செய்யப்பட்டு அதனை விற்பனை செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.8 ஆவணத்தில் தடை உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வாதி வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கதக்கதல்ல என்றும் எங்கள் எதிர்வாதம் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.08.12 17:44:49 +0530